1382

ஸ்ரீமதே வேதாந்த ராமானுஜ
மஹா தேசிகாய நம:

22 DEC 1930

# ரஹஸ்ய ஸந்ததி

## NO. 1 ப்ரபன்ன கார்யம்.

ஸ்ரீ கான வித்யா பிரஸ்,
1930.

S. தாதாசாரியார்,
ஸ்ரீவைகுண்டம்.

R6
N30.
176571

ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ
மகாதேசிகாய நம:

# ப்ரபன்னகார்யம்.

நாம் எத்தனையோ ஜன்மம் எடுத்தாகிவிட்டது, இவ்வளவு ஜென்மங்களுக்குள் எவ்வளவோ பாபகார்யங்கள் செய்திருக்கிறோம். அவைகள்மத்தியில் ஏதோ சில நல்ல கர்மமும் செய்திருந்ததால் அந்த கர்மத்தின் பலனை அனுபவிக்கவேண்டிய காலம் வந்ததும், நம்மை நல்ல ஆச்சாயனிடம் கொண்டு சேர்ப்பித்தது.

நம் ஆசார்யன் எப்படி இருக்கவேண்டுமென்றால் நம்மைப்புற்றி கவலைப்படக்கூடியவருக இருக்கவேண்டும். கேவலம் ஜாப்தாவில் சிஷ்யன் பெயரை குறித்து வைத்துக்கொண்டு பின்னீடு ஜாப்தாவை பார்த்துத்தான் அவனை ஞாபகப்படுத்திக்கொள்ளுகிறது என்று இருக்கக் கூடாது. எப்பவும் இந்த ஆத்மாவைப்பற்றின கவலை உள்ளவருக இருக்கவேண்டும். இவன் விஷயமாக நாம்

பெருமாளிடம் சரணாகதி செய்தோமே. அவன் நம்மைச் சேர்ந்தவனாச்சுதே. உத்தர காலத்தில் அவன் நன்றாக இருக்கவேண்டுமே. அதாவது அவனுக்கு நல்ல புத்தி உண்டாகவேணும். பெருமாள் தவிர வேறு தேவதைகளிடம் இவன் போகக்கூடாது. பெருமள் விஷயமாக தவிர மற்ற விஷயங்களில் இவனுக்கு புத்தி சொல்லக் கூடாது. இவன் செய்யும் காரியங்கள் எல்லாம் பெருமாள் விஷயமாகவே இருக்க வேணுமென்று இவன் விஷயமாக ஆசார்யன் கவலைப்படவேண்டும்.

ஸ்ரீதேசிகன்.

"கிடாம்பி அப்புள்ளார் அடியேனை கிளிப்பிள்ளையை பழக்குமாப்போலே பழக்கிவைக்க அவர் திருவுள்ளத்தில் இறக்கம் படியாக பெருமாள் அடியேனுக்கு தெளிய ப்ரகாசிப்பித்துமறவாமல் கார்த்து பிழையறபேசிவைத்த பாசுரங்கள்" என்று எழுதிவைத்திருக்கிறார். ஆசார்யான் கவலையால்த்தான் ஸ்ரீ தேசிகனுக்கு நல்ல ஞானம் உண்டானதாக எழுதியிருக்கிறது. அப்படிப்போல் உத்திரகாலத்தில் ஒரு ப்ரபன்னன் எப்படி இருக்கவேணு

1765
457
181·48[1]

 176571

மென்று சொல்லியிருக்கிறதோ! அப்படி இருக்கவேணு மென்றால் அது நம்மைப்பற்றி ஆசார்யன் கவலையால்தான் நடக்கும். இப்பேர்ப்பட்ட ஆசார்யனிடம் நாம் போய் சேர்ந்தோம் என்பது ஏதோ ஒரு ஜன்மத்தில்செய்த நல்ல கர்மத்தின் பலனே யாகும். இப்படிப்பட்ட ஆசார்யன் ஒவ்வொரு காலங்களில் பகவத் ஸன்னதியில் எழுந்தருளும்போது இந்த சிஷ்யன் ஞாபகம் வந்து பகவானிடத்தில் "ரங்கநாதர், இந்த குழந்தையை தேவரீரிடத்தில் ஒப்பிவித்தேனே! அவன் நன்றாக இருக்கவேணும். நல்ல சேர்க்கையும், நல்ல ஒழுக்கத்துடனும் இருக்கவேண்டுமே" என்று கவலையுடன் ப்ரார்த்தித்தால் இந்த கவலை வீண்போகாது. கட்டாயம் அந்த சிஷ்யனுக்குக்ஷேமம்உண்டு. இப்படி ஆசார்யான்பகவத்ஸன்னதியில் போகும்போது நம்மைபற்றின ஞாபகம் வரவேணுமானால் ஆசார்யானிடம் நாம் அடிக்கடி போகவேணும். நமக்கோ சரணாகதி ஆய்விட்டது. இனி ஆசார்யானிடத்தில் 'நமக்குக் கார்யமில்லை யென்று நினைத்திருக்கலாகாது. எவ்வளவுக்கெவ்வளவு ஆசார்யானிடம் நெறு

R1

ங்குகிறேமோ அவ்வளவுக்கவ்வளவு ஆசார்யாளுக்கு நம்மை பற்றின கவலை ஏற்படும்.

சரணுகதி செய்துகொண்டு முடிந்தபின். ஒருவன் தன்னைப்பற்றி நிதானித்து கவனிக்கவேண்டும். நல்ல புத்திசாலியான ஒருவனுக்கு உலகத்தில் இரண்டே கவலை. அதாவது நம் ஆத்மா நல்லசுகம் அடையவேணும். நம் சரீரம் நல்ல சுகம் அடையவேணு மென்கிறதும்.

ஆத்மா நல்லசுகம் அடையவேண்டியதற்காக ஆசார்யாளிடம் போய் நாம் பிரார்த்தித்து ஈசுவரனிடம் அவர் நம் ஆத்மாவை சேர்த்துவிட்டார். பெருமாள் நம்மை கைபிடித்துக்கொண்டார். அவர் நம்மை கைவிட மாட்டார். இனி ஆத்மா விஷயமான கவலை நமக்குவேண் டாம். சரீர சுகத்தைப்பற்றின கவலை அனுவசியம். நாம் உலகத்தில் இருப்பது கொஞ்சகாலம்; அதற்குள் எப் படி இருந்தால்தான் என்ன? அதுமட்டும் அல்ல சரீர சம்மந்தமான சுக துக்கம் என்பது நாம் என்னசெய் தாலும் நம் இஷ்டப்படி மாற்றக்கூடியதில்லை. அது ஜன்

மாந்திரத்தில் நாம் செய்த கர்மத்தின் பலனாக நமக்கு வரு கிறது. "நமக்கு ஆகாராதிகள் வேணுமே அதற்காக நாம் பாடுபடவேணுமே ; நம் பெண்டாட்டி பிள்ளைகள் எல் லாம் நாம் பாடுபட்டு சம்பாதிக்காவிட்டால் என்னசெய் யப்போகிறார்கள்" என்கிற கவலையும் நமக்கு வேண்டாம். அப்படி கவலைப்படுவது புத்திஹீனம். ஒவ்வொருவரும் தனக்கு ஏற்பட்ட கார்யங்களை ஒழுங்காய் செய்து கொண்டு வந்தால் நம்முடைய சரீர சம்மந்தமான கவலை பூராவும், ஈசுவரனைச்சேர்ந்தது.

உத்பதந்நாபி சாகாசம் விசன்னபிமஹீதளம்

அடன்னபி மஹீம்க்ருத்ஸ்நாம் நாதத்தமுபதிஷ்டதே ‖ .

ஆகாசத்தில் ஏறிக்குதித்தாலும் பாதாளத்தில் நுழைந் தாலும், உலகம் பூராவும் சுற்றிவந்தாலும் குடுத்துவைத் ததுதான் நடக்கும். உலகத்தில் ஒரே வக்கீல் உத்தியோக த்தில் பலர் அமர்ந்திருக்கிறார்கள். பணம் சம்பாதிக்க வேணுமென்கிற ஆசை ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. ஒவ்வொருவரும் வக்கீல் பரீக்ஷை தேறியிருக்கிறார்கள். சம்பாதிப்பதற்காக ஒவ்வொருவரும் சிரமப்படுகிறதும்

ஒரே மாதிரி. மனதில் உள்ள ஆவலும் ஒரேமாதிரிதான். என்ன என்ன விதமெல்லாமோ செய்து பார்க்கிறார்கள். ஆனால் சிலருக்குத்தான் பணம் வருகிறது. இது என்? ஜன்மாந்திர கர்மத்தின் பலன். நம்முடைய எத்தனத்தினால் மட்டும் ஒன்றுமே நடக்கக்கூடியதில்லை. இதே மாதிரி ஒவ்வொரு விஷயத்திலும், ஒவ்வொருவன் பணம் சேர்ப்பதற்கும், தன் பெண்டாட்டி பிள்ளைகள் சுகம் அனுபவிக்க வேணுமென்றும் எவ்வளவோ பாடு படுகிறான், ஆனால் அவனவனுக்கு ஜன்மாந்திர கர்மத்துக்குத்தகுந்தபலன்வருகிறதேயொழியஒரேவிதமானபலம் எல்லாருக்கும் வருகிறதில்லை. ரூ. 3000—சம்பளத்தில் அமைந்திருக்கிற உத்யோகஸ்தன் ஒரு நாள் முழுவதும் பாடு பட்டு ரூ. 100—சம்பாதிக்கிறான். ஒரு விறகுவெட்டுக்காரன் ஒருநாள் முழுவதும் இதைவிட ஜாஸ்தியாக பாடுபட்டு ½—ரூபாய் சம்பாதிக்கிறான். நார்டன் என்ற பெரிய வக்கீல் ஒரு நாள் வேலைசெய்துவிட்டு ரூ. 1000 பீஸ் வாங்குகிறார். அதே இன்னொரு வக்கீல் வேலை செய்துவிட்டு ரூ. 50—பீஸ் வாங்குகிறார். குழந்தைமுதல்

நார்டன் போலே இருக்கவேணுமென்று தான் ஒவ்வொருவருக்கும் கவலை ஆனால் எவ்வளவு நார்டனைப் போலே படித்தாலும் அவனைப்போலே பரீக்ஷை பாஸ் பண்ணினாலும், நார்டனாகிறதில்லை. ஆனதால் நம்முடைய எத்தனத்தில் ஒன்றுமில்லை. சரீரயாத்ரை பூராவும், நமகர்மத்தால் நடக்கிறது. நம்முடைய ஆகாரம் நாம் சம்பாதிக்கவேணுமென்கிற கவலை நமக்கு வேண்டாம். நாம் செய்யவேண்டிய தர்மத்தை செய்துகொண்டிருந்தால் ஈசுவரன் நம் கர்மத்துக்குத் தக்கபடி தானே கொடுக்கிறான். இப்போது கைதிகளில் A. கிளாஸ் B. கிளாஸ் என்று பல வகுப்பாக பிரித்து அவரவர்களுக்கு சவுகரியங்களை சர்க்காரே செய்கிறார்கள். ஆகாரமில்லாமல் ஒரு கைதியையும் கொல்லுகிறதில்லை. இவனை கைதிசெய்து ஜெயிலுக்கு கொண்டுபோனால் ஜயிலில் பணம் இருந்தால் தான் இந்த கைதியை ஜயில்க்காரன் ஒப்புக்கொள்வான். அப்படி பணம் இல்லாவிட்டால் இந்த கைதியை வெளியே அனுப்பிவிடுவான். கேவலம் மனுஷ்ய ராஜாங்கமுறையில் இந்தமாதிரி இருக்கு

மானல் சர்வக்ஞனை ஈசுவரன் ராஜாங்கமுறையில் என்னமாக இருக்கும்? நாம் செய்கிற பாபமாகிற குற்றத்திற்காக நம்மை கைதியாக்கி இந்த உலகமாகிய ஜயிலுக்கு நம்மை அனுப்புகிறன். நம்மை எந்த கிளாஸ் கைதியாக வைத்திருக்கிறனே, அதற்கு தகுந்த பணத்தை நமக்கு வைத்துக்கொண்டுதான் நம்மை இங்கே அனுப்பியிருக்கிறன். ஆகாரத்தைக் கட்டாயம் கொடுக்கிறன். சிலருக்கு சுகமான நல்ல ஆகாரம் கிடைக்கிறது. சிலர் கஷ்டப்பட்டு சாப்பிடவேண்டியதாக இருக்கிறது. ஆனதால் ஆகாரத்தைப்பற்றின கவலை ஒருவருக்குமே வேண்டாம். ஆகாரம் என்றல் ஆகாரம் மட்டுமெல்ல உலகத்திலுள்ள எந்த விஷயத்தைப்பற்றின கவலையும் நமக்கு வேண்டாம். பெருமாள் தன் காரியமாக தானே செய்துதிருவார். ஆனல் நமக்கு அடைத்த கர்மங்களை மட்டும் செய்துகொண்டுவந்தால் எல்லாம் உள்ளபடிக்கு நடக்கும். எதையும் பற்றி கவலை நமக்கு வேண்டாம்,

" நாஹாரம் சிந்தயேத் ப்ராக்ஞ: தர்மமே வாநு சிந்தயேத்/ ஆஹாரொஹி மனுஷ்யாணம் ஜன்மனு ஸஹ ஜாயதெ ||

" ஒருவன் ஆஹாரத்தைப்பற்றி கவலைப்பட வேண்டாம். தன் தர்மத்தை அதாவது கடமையை மட்டும் நடத்திக்கொண்டு வரவேணும். ஆஹாரம் என்பது மனுஷ்யனுக்கு அவன் பிறக்கும் காலத்திலேயே கூடவே பிறந்திருக்கிறது. அதைப்பற்றின கவலை வேண்டாம்.

அப்படியானல் நமக்கு இங்கே இருக்கும் காலத்தில் தேஹ யாத்ரையை நம்முடையகர்மத்துக்குதக்கபடி பெருமாள் நடத்துகிறார்; ஆத்மா மோக்ஷம் போகவேணும் என்கிற கவலையோ நமக்கு கொஞ்சம் கூட வேண்டாம்,

இனி ஒருவன் மாடு, பக்ஷி முதலியதுபோல் கண்டபடி திரியலாமோ? இவனுக்கு ஒருவிதமான கட்டும் வேண்டாமோ? இவன் எப்படித்தான் திரியக் கூடாது? இவனுக்கு ஒரு விதத்திலும் கவலை இல்லையே என்றால் அதற்கு பதில்.

நம்முடைய ஸ்வரூபம் எப்பேர்ப்பட்டது? நாம் எதற்காக சரணாகதி செய்தோம்? என்பதை கொஞ்சம்

கவனிக்கவேணும். நாம் ஈசுவரனுடைய சரீரம் நம்முடைய அவையங்கள் என்னசெய்கிறது. நம்முடைய ஆத்மாவுக்கு என்ன என்ன செய்யவேணுமென்று நினைப்பிருக்கிறதோ அதை யெல்லாம் நம்முடைய சரீரம் செய்து கொடுக்கிறது. நம்முடைய ஆத்மா பிறர் சொத்தில் ஆசைப்பட்டால் அப்பேர்ப்பட்ட சொத்து ரொம்ப கஷ்டப்பட்டு கிடைக்கவேண்டியதா யிருந்தாலும், எப்படியாவது என்ன அவமானப்பட்டாவது என்ன கஷ்டப்பட்டாவது நமது சரீரம் அதைச் செய்து முடிக்கிறது. எத்தனைபேர் எவ்விதமாகத் தடுத்தாலும், ஆத்மா மனதுபடியேதான் நடக்க நம் சரீரத்துக்கு ஆசை. அப்படிச் செய்தால்த்தான் நம் சரீரம் சுகமடைகிறதாக இருக்கிறது. அதேமாதிரி நம்முடைய ஆத்மா ஈசுவரனுக்கு சரீரம். "யஸ்ய ஆத்மா சரீரம்" எந்த ஈசுவரனுக்கு நம்முடைய ஆத்மா சரீரமாகிறதோ "என்று கருதிச் சொல்லுகிறது.

ஆனதால் ஈசுபரனுடைய திருவுள்ளத்தை பூர்த்தி செய்வதுதான் ஆத்மாவுக்கு சுகம். அதுதான் மோக்ஷம்

என்று நாம் ஆசைப்படுவது ஆகையால் மோக்ஷமாவது ஈசுவரன் இஷ்டபடி அவனுக்கு கைங்கர்யம் செய்வது தான். ஆனால் நம்முடைய சரீரம் நம ஆத்மா சொல்லுகிறபடி செய்வதில் சந்தோஷமடைகிறது என்பது நமக்கு தெறிகிறது. நம் ஆத்மா திருப்திக்காக நாம் எவ்வளவோ ஓடி ஆடி பாடுபடுகிறோம். நம்முடைய ஆத்மா ஏன் பெருமாளுக்கு கைங்கர்யம் செய்ய அதாவது பெருமாள் இஷ்டபடி நடக்க ஆசைபடவில்லை என்றால் ஜன்மாந்தர கர்மத்தால் நமக்கு பெருமாளுடைய சரீரம் இந்த ஆத்மா என்றே தோன்றவில்லை. சரீரத்தில் திமிர் பிடித்தால் அப்போது அது வேலைசெய்யவில்லை. அப்போது நம் மனசு எவ்வளவு நினைத்தாலும் அந்த வியாதி இருக்கும் காலத்தில் அந்த அவையம் ஆத்மாவுக்கு திருப்திசெய்ய வேலை செய்கிறதில்லை. ஏனென்றால் அந்த திமிர் பிடித்த சரீரம் உணர்ச்சியற்று இருக்கிறது. அதே மாதிரி கர்மம் என்கிற வியாதியால் நம்முடைய ஆத்மா என்கிற சரீரம் பிடிக்கபட்டிருப்பதால் நாம் பெருமாளுடைய சரீரம் அவர் இஷ்டப்படி நடக்கவேணுமென்று தோன

வில்லை. திமிர் வியாதி நீங்கி உணர்ச்சி வந்தால் எப்படி நம்முடைய சரீரம் நம்முடைய ஆத்மாவின் இஷ்டப்படி வேலை செய்வதிலேயே ருசியாக நினைத்து வேலை செய்கிறதோ அதே மாதிரி நம்முடைய கர்மமாகிய வியாதி போனால் நமக்கு உணர்ச்சியாகிய ஞானம் உண்டாகும் அப்போது நாம் பெருமாளுடைய சரீரம் அவர் நினைத்த வேலையை அவருக்கு செய்யவேணுமென்று அதிலேயே அதிக ருசியுடையவனாக ஆகிறோம். கர்மம் ஒழிந்தால் அதுதான் மோக்ஷம். அப்போது பகவத் கைங்கர்யத்தில் ருசி தன்னாலேயே ஏற்படுகிறது. பகவானுடைய இஷ்டப்படி வேலை செய்கிறோம். அதுவே ரொம்ப உயர்ந்த சந்தோஷத்தை கொடுக்கிறது. அது ஆனந்தம்.

நாம் மோக்ஷத்திற்காக சரணாகதி செய்தாய் விட்டது. மோக்ஷமும் இன்னும் நமக்கு கிடைக்கவில்லை. மரணமானால் கட்டாயம் கொடுக்கப்போகிறான். நிச்சயம். இந்த மத்தியில் நாம் என்ன செய்ய வேண்டியது? நம்முடைய ஸ்வரூபத்தை நன்றாக அறிந்து விபரீத ஞானம் விபரீத ப்ரவ்ருத்தி நமக்கு ஸம்பவிக்காமல் ஜாக்கிரதையாக

நடக்கவேணும். மோக்ஷத்தில் நாம் பகவானிடம் போய் அவர் திருவுள்ளத்தில் என்ன தோன்றுகிறதோ அந்த கைங்கர்யத்தை செய்ய போகிறோம். பரமபதத்தில் போனால் அவன் திருவுள்ளம் நேரில் தெரியும். அப்படி பரமபதத்தில் போய் பெருமாளுக்கு இஷ்டமான கைங் கர்யத்தை செய்யவேணுமென்று ஆசைபட்டு சரணகதி பண்ணின் நாம் இங்கே இருக்கும் காலத்தில் அவன் கைங் கர்யத்தை விடுவோமா? அல்லது விடலாமா? அவன் திருவுள்ளம் என்னது என்பது புஸ்தகத்தில் (சாஸ்திரத் தில்) எழுதிவைத்திருக்கிறது. எப்படி ஒரு வேலைக்காரன் எஜமானனிடம் கேட்டு என்ன என்ன வேலை செய்ய வேணுமென்று அறிந்து கொண்டு அந்தப்படி செய்து முடிக்கிறானோ அதே மாதிரியாக ஒவ்வொருநாளும் நாம் செய்யவேண்டிய கார்யங்களை சாஸ்திரத்தில் சொன்னபடி செய்து கொண்டு வரவேணும். அதில் ருசியுடன் செய் தால் அதுவே பரமபதத்தில் செய்கிற கைங்கர்யம்போல் வெகு இன்பமாக இருக்கும்.

இது அல்லாமலும் ஒரு ருஜகுமாரனுக்கு

வைகாசி—ஸ்ரீ 15—உ கலியாண முகூர்த்தம் வைத்தி ருக்கிறது என்றால் வைகாசி மாச பிறப்பு முதல் "சரி இன்னும் 15-நாளிருக்கிறது 10-நாளிருக்கிறது நாளன் றைக்கு கலியாணம் வருகிறது. அன்றுதினம் இன்ன விதமான ஏற்பாடு எல்லாம்நடக்கும்" என்று அவைகளை நினைத்து சந்தோஷப்பட்டு கொண்டு அதே ஞாபகமாக மற்றொருவருடன் பேசக்கூட அவனுக்கு தோன்றுது. யாராவது வந்து "உன் கலியாணத்துக்கு இன்ன இன்ன ஏற்பாடுகள் செய்கிறார்கள். பெண் இன்ன இன்ன மாதிரி இருக்கிறது" என்று கலியாண விஷய மாக பேசிக்கொண்டிருந்தால் அவனுக்கு ஆகாரத்தில் கூட ஆசையில்லாமல் அதையே கேட்டுக்கொண்டிருப் பான். அதிலேயே அவனுக்கு ருசி மற்ற எந்த சங்கதி யையும் அவனுக்கு கேழ்க்க மன மிருது. அதுபோல் மோக்ஷத்திற்கு போவதற்கு நாள் குறிப்பிட்டாய் விட்டது. அதாவது எப்போது இறந்து போகிறோமோ அன்று மோக்ஷம் போகப்போகிறோம். ஆனதால் அந்த தினம் எப்போது வர போகிறது என்று ஒரு அவலும்

அன்றுதினம் வந்தால் அது முதல் அந்த கலியாண வைபவம் எப்படி இருக்கும் மோக்ஷத்தில் போனால் நாம் எப்படி அனுபவிப்போம் அங்கேஎன்ன நடக்கும் எப்போ சுகம் கிடைக்க போகிறது என்று அது விஷயமாக பெரியோர்களிடமும் சாதுக்களிடமும் சதா பேசிக்கொண்டிருப்பதில் ருசியும் அது விஷயமான புஸ்தகங்கள் அதாவது ஸ்ரீ பாஷ்யம் முதலான வேதாந்த விஷயமான புஸ்தகங்களை சேவிக்கவும் அது சேவிக்க சக்தியில்லாவிட்டால் லேசாக அர்த்தமாக கூடியதாக தமிழில் எழுதியிருக்கப்பட்டதும் பரமபோக்யமுமான ஆழ்வார் பாசுரங்களை சேவித்து சந்தோஷமடையவும் அதற்கும் முடியாவிட்டால் அங்கே (பரமபதத்தில்) போய் செய்யப் போகிற பகவானுக்கு செய்யவேண்டிய கைங்கர்யங்களை இவிடத்திலேயே தன் சக்திக்கு தக்கபடி குற்றமில்லாததாகவும் லேசானதுமான பெருமாளுக்கு தளிகை பண்ணி சமர்ப்பிவித்தல் அதுக்கு சக்தியில்லையானால் திருவிளக்கு சமர்ப்பிவித்தல் அல்லது சாத்துப்படி சேர்த்து சமர்ப்பிவித்தல் அல்லது பெருமாளை சேர்ந்த பாகவதர்களிடம்

போய் சேர்ந்து அவர்களுக்கு சிச்ருஷை செய்யல் இப்படிப்பட்ட மோக்ஷத்தில் செய்ய கூடிய காரியங்களை சக்திக்கு தக்கபடி இங்கேயே செய்யலாம். ஸ்வரூபம் அறிந்தவனுக்கு இதை காட்டிலும் மோக்ஷத்தில் ஜாஸ்தி சுகம் கிடையாது. மோக்ஷத்தில் போனாலும் பெருமாளுக்கும் பாகவதாளுக்கும் கைங்கர்யம் செய்து தான் சுகம் அனுபவிக்கபோகிறோம். அதை இங்கேயே செய்யலாம். லக்ஷ்மணன் பெருமாளை பார்த்து "குருஷ்வ மாம்" அனுசரம். அஹம்ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத ஸ்வபத ஸசதே" என்று எவ்வளவு ஆசையுடன் பிரார்த்தித்தார். அவருக்கு ராஜ்யம் வேண்டாம். தாயார் வேண்டாம். தகப்பனார் வேண்டாம் காட்டிலும் சிரமம் லக்ஷியமில்லை ராகவனுக்கு வேலை செய்வதில் அவ்வளவு சுகம் தோன்றவில்லையா.

வைகுண்டநாதனை பரமபதத்தில் போய்த்தான் காணவேணுமென்பதில்லை.

"ஸர்வாதிசாயி ஷாட்குண்யம் ஸம்ஸ்திதம மந்தா பிம்பயோ:" என்று ஈசுவரன் அர்ச்சா அவதாரத்

தில் பூர்ணமாக இருக்கிறான். அந்த பகவானை (அர்ச்சையை) "ஆபீடான்மௌளி பர்யந்தம் பஶ்யத புருஷோத்தமம் பாதகாநி ஆசு நிஶ்யந்தி" என்று அர்ச்சையைதிருவடிமுதல் திருமுடிவரைசெவித்தானானால் அவனுடைய பாதகங்களெல்லாம் போய்விடுமென்று சொல்லியிருக்கிறது. மற்றொரு இடத்தில்

"ஸம்தர்ச நாதகஸ் மாச்ச பும்ஸாம்ஸம்மூடசேதஸாம் |
குவாஸநாகு புத்திஸ்ச குதர்க நிசயஸ்சய: |
குஹேதுஸ்ச குபாவஸ்ச நாஸ்திகத்வம் லயம்வ்ரஜேத் ||"
என்று சொல்லியிருக்கிறது.

அதாவது இந்த உலகத்தில் மதம் பலவிதம் இருக்கின்றன. பல மதஸ்தருடனும் நாம் நெருங்கிப் பழகுகிறோம். அதனால் நம்முடைய புத்தி கலங்குகிறது. அதனால் நம்முடைய ஸ்வரூபஜ்ஞானமே போய் நாம் கெட்டுப்போகிறோம். அப்போது நாம் ஆசைப்பட்ட பகவத் கைங்கரியத்தை இழந்துவிடுகிறோம். அப்பேர்ப்பட்ட சங்கதிகள் நமக்கு வருதபடி இருக்கவேண்டுமானால் கோவிலில் எழுந்தருளியிருக்கிற அர்ச்சாவதார ரூப

மான பெருமாளை ஸேவித்து அவருக்கு கைங்கர்யம் செய்தால் இப்பேர்ப்பட்ட கேடு நமக்கு வருது.

அப்படி நாம் பகவானை வணங்கும் காலத்தில் அவனை எப்படி அனுபவிக்கவேணுமென்ருல் அவன் ஒரு நாயகனுகவும், நாம் அவனுடைய ஸ்திரீயாகவும் நினைத்து அனுபவிக்கவேணும். அதாவது ஒரு ஸ்திரீ புருஷன் வீட்டிலில்லாத காலத்தில் வாசலில் ஒரு சாமான் விலைக்கு கூவுகிறதை கேழ்க்கிருள். மற்ற கிருகங்களில் அதை வாங்குவதைப் பார்க்கிருள். உடனே அவள் நினைக்கிருள், "நம்முடைய புருஷன் வீட்டிலில்லையே இந்த சாமானை எல்லாரும் வாங்குகிருர்களே நாம் இதை வாங்கலாமாகூடாதா? வாங்கினுல் ஒருக்கால் பர்தா வந்து கோவிப்பாரோ என்னமோ! அல்லது வாங்காவிட்டால் ஐயோ எனக்குரொம்பப் பிடித்த வஸ்து வாச்சுதே ஏன் வாங்கவில்லை என்று நினைப்பாருே என்னமோ! ஒன்றும் தெரியவில்லையே" என்று நினைத்து திகைத்து கடைசியில் வாங்குகிருள். புருஷன் வந்தபிறகு

இதை அறிந்து "ரொம்ப சந்தோஷம் நீ இதை வாங்கி னயே" என்கிருன் அல்லது அவனுக்கு மனதார பிடிக்காத காரியமாக இருந்தால் அவன் பிரியமான பர்த்தாவாக இருந்தால் "அடி பைத்தியமே இதை என் வாங்கினுய்? இதை நாம் சாப்பிடக்கூடாதே கிடக்கட் டும் நீ தெரியாமல் வாங்கிவிட்டாய்" என்று மன்னிக் கிருன். ஆனுல் அவன் அவ்வளவு யோஜியாமல் "பர்த்தாவுக்கு பிடிக்காமல் போனுல் என்ன, அவர் சாப்பிடவேண்டாம், நான் சாப்பிடுவேன்" என்று பர்த் தாவை லக்ஷியம் செய்யாமல் வாங்கினுல் அவன் வந்து "நீ ஏன் இதை வாங்கினுய்? சாப்பிடக்கூடாத வஸ்துவை நீ ஏன் தெரிந்திருந்தும் என்னை லக்ஷியம் செய்யாமல் வாங்கினுய்" என்று சிக்ஷிக்கிருன். அதே மாதிரி ஈசுவரன் நம்முன் இல்லை. நம்முடன் பேசவில்லை. எந்தக்காரி யம் செய்தபோதிலும் அது செய்யக் கூடியதா அல்லவா என்று சந்தேகம் ஏற்படும் காலத்தில் "ப்ரபோ, நான் இந்த காரியம் செய்கிறேனே இது உன் திருவுளத்துக்கு உகப்பாகஇருக்குமோ என்னமோ தெரியவில்லையே என்று

பயந்து செய்தால் அது தப்பான காரியமாக இருந்தா லும் தெரியாமல் செய்துவிட்டோமென்று பெருமாள் மன்னிப்பார்.

தவிரவும் பெருமாளை தான் பெற்ற குழந்தைபோல் அனு பவிக்கவேணும். குழந்தைக்கு எப்படி தலைவாரிபின்னி நல்ல ஆடைஉடித்தி உயர்ந்த ஆபரணங்களைப்பூட்டி அலங் காரங்கள் செய்து மடியைவிட்டு இறக்காமல் வைத்து அனுபவிப்பனோ. அதே மாதிரி பெருமாளுக்கு நல்ல அலங்காரங்கள் செய்து அனுபவிக்க வேணும். குழந் தையை விட்டுவிட்டு வந்துவிட்டேனே ஒருமாசம் ஆய் விட்டதே குழந்தை முகம்கூட மறந்துபோய்விட்டதே என்று கவலைப்படுவதுபோல் ரங்கனுதனை ஸேவித்து நாளாய் விட்டதே அவன் திருமுக மண்டலம் மறந்து போய்விட்டதே என்று ஆவலுடன் ஸேவிக்கவேணும்.

ஒவ்வொரு சமயத்திலும் ஈசுவரனை ஓர் யுவராஜா போலவும் மதயானைக்கு சமீபத்தில் போவது போலவும் நடுங்கிஅணுகவேணும்.

இப்படி ஒவ்வொரு விதமாக ஈசுவரனை இந்த லோகத்தில் அனுபவிப்போமானால் இதைகாட்டிலும் பரம பதத்தில் அனுபவிப்பது அதிகமில்லை.

உலகத்திலுள்ள சுக துக்கங்களை பற்றி நாம் சொஞ்சமும் லக்ஷியம் செய்ய கூடாது. ராகவனைவிட்டு பிரிந்திருந்தசீதை ராக்ஷஸர்கள் தன்னைபயமுறுத்தினதைப் பற்றியும் கொஞ்சமேனும் லட்சியம் செய்யவில்லை. அசோகவனத்தில் அந்த திவ்யமான புஷ்பங்களையும் பழங்களையும் கண்டு சந்தோஷப்படவுமில்லை. அவளுக்கு நாம் எப்போது ராகவனைப்போய் காணப்போகிறோம். என்கிற ஒரே கவலைதான். ராகவனைவிட்டு சீதை பிறிந்த தற்கும் நாம் நம்முடைய நாயகனன் பெருமாளை விட்டு பிறிந்திருப்பதற்கும் வித்யாஸம் அதிகமுண்டு. பெருமாள் நம்முடைய பாபகர்மத்திற்காக நம்மிடம் அதிக கோபத் துடன் "த்ரோஹீ" என்று நம்மை தரிசரிடத்திலிருமல் இந்த உலகத்தில் தள்ளிவைத்திருக்கிருர். பர்த்தாவால் தள்ளுபட்டுகிடக்கிறஒருஸ்திரீக்குஅவர்முன்னிலையிலேயே எதிர் வீட்டிலிருந்து கொண்டு நன்ருக தலைவாரி

புஷ்பங்கள் முதலியது வைத்துக்கொண்டு தேஹத்தை அலங்கரித்துக்கொண்டால் அது அந்த புருஷனுக்கு திருப்தியாக இருக்குமா? அதே மாதிரி இந்த உலகத்தில் தள்ளுண்டு கிடைக்கிற நமக்கு சுகத்தில் ஏன் ஆசை வேண்டும். அப்படி சுகங்கள் ஏற்பட்டால் "நான் இப்படியும் இருக்கவேணுமென்று உம் திருவுள்ளமோ சரி! நீ எப்படி வைத்தாலும் நான் இருக்கவேண்டியவன்தான் 'என்று அப்போதுவருகிறசுகங்களையோ தூக்கங்களையோ" "ஈசுவரனுடைய கட்டளை நாம் இதைத்தவிற்க முடியாது" "என்று அனுபவித்து தீரவேணும். அதை விலக்க முடியாது என்று அனுபவிக்கவேணும். இப்படி அனுபவிக்கும் காலத்திலும் கூட "இதுகள் ஈசுவரன் திருவுள்ளம். இன்னம் கொஞ்சநாள்த்தான் இந்த மாதிரியான ஸ்திதி. ஆச்சு. மரணம் வந்தால் கட்டாயம் நமக்கு பெரிய அழிவில்லாத சுகம் கிடைக்கப்போகிறது" என்று "ம்ருத்யு எப்போது வரப்போகிறன்? அவனல்லவோ நமக்கு ஆப்த சினேகிதன் வேறு எது வந்தால்த்தான் நமக்கு என்ன பிரயோஜனம்? பிள்ளை பிறந்தால் என்ன

பெண் பிறந்தால் என்ன, சினேகிதன் வந்தால் என்ன, எது வந்தால் என்ன, யார் வந்தால் என்ன? அதுகளால் ஏற்படும் சுகம் கொஞ்ச காலத்திற்கு இந்த எமன் கொண்டு வருகிற சுகம் சாஸ்வதமானது. அளவிலடங்காத சுகம். ஆகையால் ம்ருத்யுதான் நமக்கு பெரிய சுக்ருத் அவன் எப்போது வரப்போகிறன்" என்று அவன் வரவை சந்தோஷத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேணும்.

இப்படி ஸ்வரூபத்தை அறிந்து ஒருவன் நடந்து வருவனேயானல் அவனுக்கு எதனல் பயம், எதனல் கேடு, எதனல் கோபம்? ஒரு விதத்திலும் அவனுக்கு இந்த உலகத்தில் துக்கம் கிடையாது. ஒருவனல் நமக்கு அவமானம், வசவு முதலியது நேர்ந்தால் அந்த அவமானமும் வசவும் நம்மை என்ன செய்யும்? ஈசுவரனிடம் போக நம் ஆத்மா தயாருக இருக்கிறது. போகப் போகிறது. இந்த அவமானமும், வசவும் நம்முடைய ஆத்மாவை மோக்ஷத்திற்கு போகாமல் நிறுத்த முடியுமா?

தவிரவும் அப்படி நம்மை அவமானம் செய்கிறவர்கள் தாங்கள் செய்கிற கார்யமில்லே. நாம் ஜன்மாந்திரத்தில் செய்த கர்மத்திற்க்காக ரோட்டில் போகும்போது எப்படி இடரி விழுந்து காயப்பட்டு கஷ்டபடுகிறோமோ அதேமாதிரி பெருமாள் இந்தமனுஷன் அவமானபடுத்தல் மூலமாகவும் வசவுமூலமாகவும் நம்மை தொந்தரவு செய்கிருர். அது மனுஷன்குற்றமல்ல. அது நம்முடைய கர்மபலம் என்று நினைக்கவேணும். அதேமாதிரி நமக்கு என்னவிதமான கெடுதல் யாருல் நேர்ந்தாலும் அதை நாம் பொருட்டாகவே காட்டகூடாது. அவர்களிடத்தில் விரோத புத்தியும் நமக்கு ஏற்படக்கூடாது. நாம் நம் முடைய தர்மங்களை செய்வதில் எதாவது பயஹேதுகள் ஏற்பட்டாலும் அதனல் நமக்கு என்ன பயம்? நாமோ எமனே எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறோம். நமக்கு யாருல் என்ன கெடுதல் செய்யமுடியும் பெருமாள் நம்மை காப்பாற் ஸங்கல்பம் செய்திருக்கும் போது யாருல் என்ன கெடுதல் செய்யமுடியும். ஆனல் சரணு கதி செய்துஇருக்கிற நாம் இனி என்ன செய்ய வேணு

17657

மென்றால் இப்படி நமக்குபரம சாம்ராஜ்யத்தை பெருமாள் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். அது எதனால் என்று யோசித்துபார்க்க வேணும். இப்படிப்பட்ட பரம சாம்ராஜ்யத்தை பெருமாளிடம் நமக்கு வாங்கிக்கொடுத்தும் அதில் நம்மை ஆசைப்படும்படி செய்து வைத்ததும் நம் ஆசார்யன் அல்லவா. ஆனதால் அவரை நாம் சதா நினைத்துக் கொண்டிருக்கவேண்டும் அவருக்கு நாம் செய்ய கூடிய சகலவித சிச்ருஷையும் செய்யவேணும். இப்படி மஹோபகாரம் செய்த ஆசர்யனுக்கு நாம் என்ன செய்தால்தான் தகாது, "இதற்கோர் கைம்மாறு மாயனும் காண சில்லான்" இது முதல் பகவான் விஷயமான காரியம் தவிற மற்றதில் நமக்கு எண்ணமே இருக்ககூடாது. நாம் சத்திரத்தில் வந்து ராத்திரி காலத்துக்காக தங்குகிறோம். விடிந்தவுடன் அதைவிட்டு புரப்படப்போகிறோம். மூட்டை எல்லாம் கட்டிவைத்தாய் விட்டது விடிய 4-நாழிகைக்கே தூக்கம் வரவில்லே. இருட்டாக இருக்கிறதே என்று உட்கார்ந்திருக்கிறோம். அப்படி இருக்க அந்த சமயத்தில் அந்த சத்திரத்தை

ரிப்பேர் செய்ய வேணும் அடுப்பு நன்றாக இல்லை இதற்கு வேறு அடுப்பு போடவேணுமென்று வேலை செய்ய ஆரம்பி விப்போமா. விடிந்தவுடன் புறப்பட்டு போவதற்காக விடிவுகாலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பவனுக்கு ஷி பிரயாணசம்மந்தமான யோஜனை தான் இருக்குமே தவிர சத்திர சம்மந்தமான யோஜனை இருது. அதுபோல நாம் சரணாகதி செய்து கொள்ளுமுன் ஓர் பெரிய காளராத்ரி இந்த உலகமான சத்திரத்தில் வந்து தங்கியிருக்கிறோம். சரணாகதி பண்ணிய பின் விடியகால சமயமாகி விட்டது. மரணமாகிய வெடிவை எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த காலத்தில் உலகத்தைப்பற்றிய கவலை என்? சத்திரத்தில் ஜாஸ்தி ஆசை வைத்தானானால் பிரயாணம் நின்றுபோகும்.

3. லோகத்தில் நம்முடைய குற்றங்களில் ரொம்ப பெரிய குற்றம் எது என்றால் களவு. அதை நாம் ஒவ்வொருவரும் தினம்தோறும் செய்துகொண்டிருக்கிறோம். சொம்பை திருடினான் குடத்தை திருடினான் என்று உல

கத்தில் ரொம்ப குறைவாக நினைத்து குற்றவாளியை தண்டிக்கிறோம். மகாரத்நத்தை திருடினால் பெரிய குற்றமாக சொல்லுகிறோம். அதே ராஜாவுடைய ரத்னத்தை திருடினால் இன்னும் பெரிய குத்தமாகிறது. அப்படி இருக்க பெருமாளுடைய ரத்னத்தை திருடினால் அதைவிட பெரிய குற்றம் ஒன்றுமே கிடையாது. நம்முடைய ஜீவனை "மணிவர இவசௌபே" என்று பெருமாளுடைய உயர்த்த ரத்தினமாக சொல்லப்பட்டிருக்கிரது. அதை நாம் ஒவ்வொருவரும் திருடிக்கொண்டிருக்கிறோம். அதாவது நம்முடைய ஜீவாத்மா பெருமாளுடைய சொத்து. அவன் சவுகரியத்திற்காக உள்ளது. அதை நாம் நம்முடைய சொத்து என்றும் அது நம்முடைய சவுகரியத்திற்கு தக்கபடி நம்முடைய இச்சையாலேயே அவ்வளவையும் நடத்துவதாகஎண்ணி சுவாதந்த்ரியம் கொண்டாடுகிறோம். ஒருவன் யாசகார்த்தமாக திருநெல்வேலி சேர்ந்தவுடன் சமீபத்தில் தன் சினேகிதம் சப்மேஜிஸ்திரேட் வேலையாகயிருப்பதாகவும் அன்றுதான் அவருக்கு தாசில் வேலைக்கு உத்திரவு வந்திருப்பதாக கேழ்விப்பட்

டான், உடனே அவனிடம் போய் பார்ப்போம் என்று போகிறான். அவனை பார்த்து "ரங்கசாமி" என்னை தெரிகிறதா "என்கிறான்" அடே நம்மகிச்சாமி இன்னு நாம் எல்லாரும் ஸ்ரீரங்கம் சொக்கி மடம் பள்ளிக் கூடத்தில் ஒன்றாக வாசிக்கவில்லையா? நான் உன்னை மறப்பேனு "கிச்சாமி" ன்கிறான் உடனே "ரங்கசாமி உனக்கு ப்ரமோஷன் ஆச்சாமே" என்று கேழ்கிறான். உடனே அவன் "கிச்சாமி" நீ என்ன நினைக்கிறாய்? எல்லாம் நடந்து கொள்ளுகிற மாதிரியில் இருக்கிறது. எது வேணு மானாலும் நடத்தலாம் கலெக்டரிடம் போய் கொஞ்சம் பேசிக்கொண்டிருந்தேன் நான் பேசின பேச்சிலிருந்து ஒரு நிமிஷம் ஆடர் வாங்கிக்கொண்டு வந்துவிட்டேன்" என்றான் உடனே கிச்சாமி:— "நீ என்றைக்குமே கெட் டிக்காரன் தான்" என்றான் உடனே ரெங்கசாமிக்கு சந்தோஷம் ஜாஸ்தியாகி அவனுக்கு ரூ. 1 யாசகம் கொடுத்து அனுப்பினான். கிச்சாமி ஊருக்கு போய் விட்டான். 5, 6 வருமகழித்து கிச்சாமி மறுபடியும் இந்த தாசில்தாரை வேறு ஊரில் போய் பார்க்கிறான்.

அன்று தினம் அவன் சம்சாரம் தவிற போய் ரொம்ப துக்க மடைந்திருக்கிறன். "என்ன ரங்கசாமி, உனக்கு இப்படி கஷ்டம் வந்து விட்டதே "என்கிறன்" "இந்த பாழும் தெய்வத்துக்கு கண் தெறியவில்லையே" என்று ரெங்கசாமி பதில் சொல்லுகிறர். ஒருவனுக்கு நல்ல தசை எற்பட்டால் அது தன்னுடைய எத்தனத்தால் வந்ததாம் கெட்டதசை எற்பட்டால் அது கண்ணில்லாத தெய்வத்தின் கார்யமாம். இரண்டுமே தெய்வம் நம்முடைய கர்மத்துக்கு தக்கபடி நமக்கு செய்கிற காரியம் எப்பேர்பட்ட மஹத்தான ஸ்தானம் கிடைத்தாலும் "இது ஈசுவரன் திருவுள்ளம். நம்மால் என்ன செய்ய முடியும்? அவனுடைய கார்யம், என்று நினைக்க வேணும். தன் காரியமாக எதையும் நினைத்து பெருமைப்பட கூடாது. அதே மாதிரி யாருக்கு என்னவிதமான கெடுதல் வந்த போதிலும் உடனே நம்மிடமிருக்கிற குறைவைப்பற்றி யோஜிக்க வேணும் நம்முடைய பாபத்தை நினைத்தோமானல் அயலார் செய்யும் காரியம் ஒன்றுமே பாபம் இல்லை. அப்படி மகத்தான பாபங்களை ஒவ்வொருவரும்

ஒவ்வொரு நாளும் செய்து வருகிறோம். அது நம்முடைய மனதுக்கு பாபமாக படவில்லை. பட்டாலும் அதை பற்றி நாம் நினைக்கிறதில்லை. மற்றவரிடமுள்ள குற்றத்தை நினைத்து சிறிக்கிறோம்.

"பராந்த்ரேஷு ஜாத்யந்தா" மற்றவருடைய குற்றத்தில் நாம் பிறவி குருடர்போல இருக்கவேணும். நம்முடைய குற்றத்தைபற்றி நாம் நினைத்து வருந்துவதாக இருந்தால் பிறர் குற்றம் நமக்கு கொஞ்சமும் படாது. நாம் நம்முடைய குற்றத்தையும் பூருவாக மறந்து பிறர் குற்றத்தையே நினைத்துக்கொண்டிருக்கிறோம். இது முற்றிலும் தவறு.

4. நாம் சம்பாதிக்கிற எந்தவஸ்துவும் நமக்கு சொந்தமில்லை. அது ஈசுவரன்தான் நமக்கு கொடுத்தான் நாம்செய்கிறகாரியம் ஒவ்வொன்றையும் அவனுக்காகவே நாம் செய்யவேணும். ஆகையால் ஒருவன் ப்ரபன்னனுல் அவன் செய்ய வேண்டிய காரியங்களாவன.

1. சந்த்யா வந்தனம் முதலிய நித்ய கர்மானுஷ்டானங்களை விடாமல் செய்து வரவேணும்.

2. பெருமாளுக்கு தினம் திரு ஆராதனம் செய்து வரவேண்டியது.

3. நாம் சாப்பிடுகிற எந்த பதார்த்தத்தையும் பெருமாள் அமுது செய்து பிறகுதான் சாப்பிடவேணும்.

4. எந்தக்காரியத்தைச் செய்தாலும் எப்படி ஆத்திலிருக்கிற பெரியவாளிடத்தில் அனுமதிபெற்று செய்கிறோமோ அதே மாதிரி ஆசார்யாளையும் பெருமாளையும் நினைத்து அவர்களிடம் அனுமதி கேட்டுக்கொண்டு அதின் பேரில்த்தான் செய்யவேணும்.

5. தேவதாந்தரங்களை சேவிக்கக்கூடாது எந்த பலத்தையும் அந்த இடங்களில் கேழ்க்கக்கூடாது.

6. பெருமாளிடத்திலும்கூட நல்ல ஞானம் வேணுமென்றும் ஆசார்யானிடமும் பெருமாளிடமும் பக்தி

வேணுமென்றுமட்டும் கேழ்க்கலாமே யொழிய மற்ற எந்த விஷயத்தையும் ப்ரார்த்திக்கக்கூடாது.

7. எப்போதும் த்வயத்தையே சொல்லிக்கொண்டிருக்கவேணும். அப்படி சொல்லும்போது அதன் அர்த்தத்தையும் கவனித்துக்கொள்ளவேணும்.

8. பாகவத கைங்கர்யம் செய்வதில் ஆசையுள்ளவனாக இருக்கவேண்டும்.

9. பெருமாளை அடிக்கடி ஸேவிக்கவேணும். பெருமாளுக்கு சவுகரியத்துக்குத் தக்கபடி அமுதுபடி, திருவிளக்கு, திருமாலை, சாத்துப்படி கைங்கர்யங்கள் செய்தல் வேணும்.

10, அடிக்கடி ஆசார்யாள் சன்னதிக்குப்போய் ஆசார்யாளுக்கு சிச்ரூஷை செய்தல் வேணும்.

11. நம் சத்ருக்களிடமும்கூட கெட்ட நினைப்பில்லாமலிருக்கவேணும்.

12. நாம் செய்கிற எந்த வைதிக கார்யத்தையும் இதை மோக்ஷம் பெறவேணுமென்று செய்யவில்லை. பெருமாள் திருவுள்ளத்திற்காகவே செய்கிறேமென்று நினைத்துச் செய்யவேணும்.

13. சந்தோஷம் வந்தாலும், துக்கம் வந்தாலும் மனது கலங்காமலிருக்கவேணும்.

14. எப்பேர்ப்பட்ட பெரிய சவுகரியம் ஏற்பட்டாலும்கூட அது எல்லாம் பெருமாள் செய்த கார்யம் நம்மால் ஒன்றும் இல்லை என்று இருக்கவேணும்.

15. "வாசித்ததும் கேட்டு வணங்கி வழிபட்டும், பூசித்தும் போக்கினேன் போது" என்று நம்முடைய காலத்தைக் கழிக்கவேணும்.

16. "வரம் ஹுதவஹஜ்வாலா பஞ்ஜ நாந்தர்வ்ய வஸ்திதி !

நசௌரி சிந்தாவிமுகஜன ஸம்வாஸவைசஸம் !

என்று ஜ்வாலையினால் கூடு கட்டி அதற்குள் குடியிருந்தாலும் இருக்கலாம். பெருமாளை அலக்ஷியம் செய்தவர்களுடன் சேரவே கூடாது.

17. சாஸ்திரத்தை இல்லை என்று யுக்தியின்பேரில் வாதம் செய்கிறவர்களுடன் சேரக்கூடாது. அந்த மாதிரி வியவகாரம் செய்யவும் கூடாது.

18. புத்திசாலியான ஒருவனுக்கு இந்தவிஷயங்களை ஆராய்ந்தால் இந்தப்படி நடப்பது சுலபம் என்று தோன்றலாம். இருந்தாலும் நம்மிடத்திலிருக்கிற ரொம்பவும் பலமான ப்ராரப்த கர்மத்தின் பலனாக இந்தப்படி நடக்காமல் அநேசக மகத்தான பாபங்களை புத்திப்பூர்வகமாகவே அடிக்கடி செய்கிறோம். அவைகளை நினைத்து நாம் எவ்வளவு கேவலமான மனுஷ்யன் நாம் எவ்வளவு கேவலமானபாபகாரியங்களை செய்கிறோம் என்று நாம் இளப்பமாகியமனுஷ்யன் என்கிற எண்ணம் மனதில் எப்போதும் இருக்கவேண்டும்.

19. இப்படி நாம் ஒவ்வொரு காலத்திலும் செய்கிற பாபகர்மத்திற்கு உடனே பெருமாளிடம் சரணாகதி செய்யவேணும். அதாவது பெருமாளிடம் ஸாஷ்டாங்கமாக ஸேவித்து "ஸ்வாமி நான் இப்படிப்பட்ட பாபம் செய்துவிட்டேன் நீர் க்ஷமிக்க வேணும் என்று பிரார்திக்கவேணும்" இதில்கண்ட விஷயங்கள் மனதில் படுவது கஷ்டம் வாயினால் யாரும் சொல்லலாம் இது மனஸில் நன்றாக பதிந்து அப்படியே யனுஷ்டித்து வரும்படியான ஞானத்தை ஆசார்யனும் பெருமாளும் தாயாரும் அனுக்கிரகம் பண்ணவேணுமென்று பிரார்திக்கின்றேன்

முற்றிற்று.

17657 600 008

ஸ்ரீ கான
வித்யா பிரஸ்,
சாலைத்தெரு,
ஸ்ரீவைகுண்டம்.
1930.